# செய்தி மடல்

## NEWS LETTER – SOND - March & April 2019

**SOND** — Social Organizations Networking for Development

### SOND நிறுவனத்தைப் பற்றி:-

**SOND நிறுவனமானது புதிய சமூகம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் நிறைவேற்றுப் பணிப்பளர் திரு.ச.செந்துராசா அவர்களால் 1998 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் வட கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் கிளைகளைக் கொண்டு சமூக மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு செயற்பாட்டிலும், சமூக அபிவிருத்தி செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். இந் நிறுவனம் ஆரம்பிக்கபபட்டு 20 வருடங்களை கடந்து பணிகளைத் தொடர்கிறது.**


## Contact Information:

**Director :- Mr.S.Senthurajah**
**T.P no :- 021 222 6700,**
**077 3314262**
**E-mail :- senthu@eureka.lk**
**Address :- 18/10 Wymen road,**
**Nallur,**
**Jaffna.**
**&**
**R.K.M.Road,**
**Akkaraipattu.**


### வல்வெட்டிதுறை கடற்கரையை அழகாக்கும் பணி

Chemical society, University of Jaffna, MEPA & **SOND** ஆகிய நிறுவனங்கள் இணைந்து "Go Green" project இன் ஊடாக பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை கடற்கரை அண்மையில் சுத்தம் செய்யப்பட்ட போது பல்கலைக் கழக மாணவர்களும் **SOND** நிறுவன பிரதிநிதியும் கலந்து கொண்டனர்



### சமூக மதிப்பீடு இளவாலை வடமேற்கு





NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் SCORE திட்டத்தின் கீழ் இலகுபடுத்துனர்களாக பயிற்றுவிக்கப்பட்டவா்களால் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராமங்களில் ஒன்றான இளவாலை வடமேற்கு கிராம சேவகர் பிரிவில் இரண்டு நாள் சமூக மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் SOND நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும், SOND நிறுவன ஊழியர்களும் NPC நிறுவனத்தின் SCORE திட்டத்தின் திட்ட முகாமையாளர் திரு.றங்கிக்க அவர்களும், திட்ட உத்தியோகத்தரான திருமதி.முகுந்தினி அவர்களும் இதனை இணைந்து நடாத்தினர்.

## சமூக மதிப்பீடு கொல்லங்கலட்டி

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் SCORE திட்டத்தின் கிழ் இலகுபடுத்துனர்களாக பயிற்றுவிக்கப்பட்டவா்களால் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராமங்களில் ஒன்றான கொல்லங்கலட்டி கிராம சேவகர் பிரிவில் இரண்டு நாள் சமூக மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் SOND நிறுவன ஊழியர்களும் NPC நிறுவனத்தின் SCORE திட்டத்தின் திட்ட உத்தியோகத்தரான திருமதி.முகுந்தினி அவர்களும் இதனை இணைந்து நடாத்தினர்.







## மாணவர்களுக்கான உதவி வழங்கல்

தெல்லிப்பளை பிரதேசத்தை சேர்ந்த சொண்ட் நிறுவனத்தால் இனம் காணப்பட்ட பிரபாகரன் பிரணவன், மதன் றொஜித் ஆகிய இரு மாணவர்களுக்கு சிவசுப்பிரமணியம் அறைக் கொடை நிதியம் ஊடாக கனடா சிவசுப்பிரமணியம் ஸ்ரீ பிரகாஷ், வினோதா ஸ்ரீதரன் ஆகியோர் இரு துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் பகலவன் TVயின் எம்தேசம் எம் மக்கள் நிகழ்ச்சி தயாரிப்பாளர் விமல்ராஜ் ஊடாகச் செய்யப்பட்டது.

## Halo trust நிறுவனத்தினருடனான கூட்டம்

அண்மையில் The Halo trust நிறுவனத்தை சேர்ந்த Ms.Belinda Vause (Programme Manager) அவர்களும் Ms.Julie Utting (Programme officer) அவர்களும் SOND நிறுவனத்திற்கு வருகை தந்து எமது நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிபாளர் திரு.ச.செந்துராசா அவர்களுடன் தற்போது MRE திட்டம் இல்லாத போதும் நாம் தன்னார்வ தொண்டு அடிப்படையில் MRE செயற்பாடுகளை எவ்வாறு செய்கின்றோம் எனவும் கடந்த கால செயற்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பது தொடர்பாகவும் கலந்துரையாடினர். இதில் SOND நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



## VCDC & VDP தொடர்பான கூட்டம்

SOND நிறுவனத்தின் ஏற்பாட்டில் வயாவிளான் கிழக்கு, பலாலி தெற்கு, பலாலி வடக்கு, பலாலி கிழக்கு கிராமங்களில் VCDC மற்றும் VDP தொடர்பான கலந்துரையாடல் கூட்டங்கள் SOND நிறுவனப்பணிப்பாளர் திரு.ச.செந்துராசா

அவர்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.





**இளவாலை வடமேற்கு சமூக மதிப்பீடு தொடர் நடவடிக்கை கூட்டம்**

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் SCORE திட்டத்தின் சமூக மதிப்பீட்டில் இனம்காணப்பட்ட வேலைத்திட்டங்களை மேற் கொள்வதற்கான கலந்துரையாடல் இளவாலை வடமேற்கு கிராம சேவகர் பிரிவில் திரு.ச.செந்துராசா அவர்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது இதில் NPC நிறுவனத்தின் SCORE திட்டத்தின் திட்ட உத்தியோகத்தரான திருமதி.முகுந்தினி அவர்களும் கலந்து கொண்டார். மேலும் ஏப்ரல் மாதத்திற்கான கூட்டம் 11.04.2019 அன்று நடைபெற்றது.



**SAM சிறுவர்களின் கண்காணிப்பு தொடர்பான தாய்மார் கழகங்களுக்கான கூட்டம்**

தாய்மார் கழகங்களுக்கான SAM சிறுவர்களின் கண்காணிப்பை மேற்கொள்வதற்கான கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. இதில் SOND நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி திரு.S.சிவதாஸ் அவர்களும் கலந்து கொண்டனர்

**World Vision நிறுவனத்தின் திட்டங்களும் அதில் சொண்ட் நிறுவனத்தின் பங்கேற்பு தொடர்பான கலந்துரையாடல்**

World vision நிறுவனத்தின் தற்போதைய திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் SOND நிறுவனத்தில் நடைபெற்றது இதில் World vision நிறுவனத்தை சேர்ந்த திரு.வென்சியஸ் அவர்களும் SOND நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும் SOND பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



**Connecting the connectors of SCORE Actors Training**

US Aid நிறுவனத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் Connecting the connectors of SCORE Actors பயிற்சியில் SOND நிறுவனத்தை சேர்ந்த SCORE திட்டத்தின் இலகுபடுத்துனர்கள் கலந்து கொண்டனர்.



**தாய்மார் கழகங்களுடனான கலந்துரையாடல்**

தெல்லிப்பளை பிரதேசத்திற்கு உட்பட்ட வித்தகபுரத்தை அண்மித்த பிரிவிலுள்ள

தாய்மார் கழகங்கங்களை ஒன்றிணைத்து சொண்ட் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களால் தாய்மார் கழங்களின் செயற்பாடு தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.




இதே போன்று அளவெட்டியை அண்மித்த பிரிவிலுள்ள தாய்மார் கழகங்கங்களை ஒன்றிணைத்து சொண்ட் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களால் தாய்மார் கழங்களின் கண்காணிப்பு தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும் MOH அலுவலகத்திலும் பலாலி கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன இதில் குறித்த அலுவலகங்களை அண்மித்த கிராம சேவகர் பிரிவிலுள்ள தாய்மார் கழகங்கங்களை சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.



## சமூக மதிப்பீடு வசாவிளான் கிழக்கு

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் **SOND** நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் SCORE திட்டத்தின் கிழ் இலகுபடுத்துனர்களாக பயிற்றுவிக்கப்பட்டவர்களால் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராமங்களில் ஒன்றான வசாவிளான் கிழக்கு கிராம சேவகர் பிரிவில்இரண்டு நாள் சமூக மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் **SOND** நிறுவன ஊழியர்களும் NPC நிறுவனத்தின் SCORE திட்டத்தின் திட்ட உத்தியோகத்தரான திருமதி.முகுந்தினி அவர்களும் இதனை இணைந்து நடாத்தினர்.





## சமூக மதிப்பீடு பளைவீமன்காமம் தெற்கு

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் **SOND** நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் SCORE திட்டத்தின் கிழ் இலகுபடுத்துனர்களாக பயிற்றுவிக்கப்பட்ட வர்களால் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராமங்களில் ஒன்றான பளைவீமன்கமம் தெற்கு கிராம சேவகர் பிரிவில்இரண்டு நாள் சமூக மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் **SOND** நிறுவன ஊழியர்களும் NPC நிறுவனத்தின் SCORE திட்டத்தின் திட்ட உத்தியோகத்தரான திருமதி.முகுந்தினி அவர்களும் அதனை இணைந்து நடாத்தினர்.



## ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை மற்றும் பாடசாலைகளிற்கான விஜயத்தினை மேற்கொண்டனர்.






ஐயரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் யுனிசெவ் நிறுவனத்தினூடாக சொண்ட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஊக்க உதவி எனும் கருப்பொருளைமையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு செயற் திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் சொண்ட் நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து குட்டியபுலம் அரசினர் தமிழ்க்கலைவன் பாடசாலை புதிய கட்டடத் தொகுதி மற்றும் பளைவீமன்காமம் தெற்கு கலைமகள் முன்பள்ளியினையும் திறந்து வைத்தனர்.

## இளைஞர்களுக்கான நிலைமாறு கால நீதி தொடர்பான பயிற்சி


தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான நிலைமாறு கால நீதிதொடர்பான 3 நாள் பயிற்சி கொழும்பில் இடம்பெற்றது இதில் சொண்ட் நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.











## கண்ணிவெடியகற்றும் அபாயம் தொடர்பான உபாய ஆவணம் வெளியீடு

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரம் மீள்குடியேற்றம் புனர்வாழ்வழிப்பு வடமாகாண அபிவிருத்தி தொழிற் பயிற்சி திறன் இளைஞர் விவகார அமைச்சு தேசிய கண்ணிவெடியகற்றும் அபாயம் உபாய கையேடு வெளியீடு மார்ச் மாதம் 13 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சினமன் லேக்சைட் hotel இல் நடைபெற்றது இதில் எமது நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்கள் கலந்து கொண்டார். அதே தினம் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.






வடக்கு அபிவிருத்தி அமைச்சு செயலாளர் திரு.V.சிவஞானசோதி அவர்களும் தூதுவர்களும் அமர்ந்திருப்பதையும், அபிவிருத்தி பங்காளர் அமைப்பு தலைமை அதிகாரி பற்றிக் வென்டபோல் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

"Better world Movement"

